**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No.147/2018 தேதி- 08.11.2025

(D.W.1) - ஜாண்றோஸ்

குறுக்கு விசாரணை

1. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் எலக்ட்ரீசியனாக வேலை செய்து வருகிறேன். நான் திருமணம் செய்துகொள்ளவில்லை என்றால் சரிதான். அங்கன்வாடி என் வீட்டிற்கு தொட்டு தெற்கு பக்கம் உள்ளது என்றால் இல்லை 50 அடி தொலைவில் தெற்கு பக்கத்தில் அமைந்துள்ளது. மேற்சொன்ன அங்கன்வாடி தொட்டு வடக்கு பக்கம் எனக்கு வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன வீடு பயன்படுத்தமால் பூட்டு போட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன வீட்டிற்கு மின் இணைப்பு எவ்வழியாக செல்கிறது என்றால் மின் இணைப்பு ஏதும் பெறவில்லை. என் வீட்டிற்கு தொட்டு மேற்கு பக்கம் புதிய புல எண்.41/2 என்றால் சரியல்ல மேற்கு பக்கம் ரோடு உள்ளது. மேற்சொன்ன புதிய புல எண்.41/2 வரைபடத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய சொத்தை தொட்டு மேற்கு பக்கத்தில் மேற்சொன்ன புதிய புல எண்.41/2 உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. மேற்சொன்ன புதிய புல எண்.41/2 மேற்கு அற்றத்தில் இருந்து தான் ஒரு வழிப்பாதை தொடங்குகிறது என்றால் சரியல்ல.

2. மேற்சொன்ன புதிய புல எண்.41/2 -ல் கிழக்கு உள்ள பகுதியின் வழிப்பாதை வழியாக தான் மெயின் ரோட்டிற்கு செல்ல முடியும் என்றால் சரியல்ல. மேற்சொன்ன புதிய புல எண்.41/2 -ற்கு மேற்கு பக்கம் தான் மேக்காமண்டபத்தில் இருந்து சாறோடு மெயின்ரோடு உள்ளது என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு தொட்டு வடக்கு பக்கம் புதிய புல எண்.41/1C அமைந்துள்ளது என்றால் இல்லை. என் வீட்டிற்கு வடக்கு பக்கம் யார் சொத்துள்ளது என்றால் விஜயகுமாரிக்கு உரிமைப்பட்ட சொத்தாகும். என் வீட்டின் வடக்கு பக்கம் உள்ள கண்டத்தின் தாண்டி வடக்கில் தான் மெயின் ரோடு உள்ளது என்றால் சரியல்ல. என் சொத்தில் இருந்து மெயின்ரோட்டிற்கு வரவேண்டும் என்றால் விஜயகுமாரியின் சொத்தை தாண்டி தான் செல்ல முடியும் என்றால் இல்லை. மேற்கு பக்கத்தில் தான் ரோடு உள்ளது. மேற்சொன்ன அங்கன்வாடிக்கு எந்த வழியாக மின் இணைப்பு வழங்கப்பட்டது என்றால் என் வீட்டின் வடக்கு பக்கத்தில் இருந்து கிழக்கு

நோக்கி மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன அங்கன்வாடிக்கு செல்லும் மின் இணைப்பில் இருந்து ரோட்டில் இருபுறமும் உள்ள வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் வீட்டின் கிழக்கு பக்கம் யார் சொத்து உள்ளது என்றால் ரோடு உள்ளது. மேற்சொன்ன ரோடு வடக்கில் இருந்து தெற்கு நோக்கி செல்கிறது என்றால் சரிதான். மேற்சொன்ன ரோட்டின் கிழக்கு பக்கம் தான் வழக்கின் வாதியின் வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான்.

3. வாதி சுசிலாபாய்க்கு ஜெசிலேட் என்ற மற்றொரு பெயர் உள்ளது என்றால் சரிதான். சுசிலாபாய் சொத்தின் சர்வே எண்.42/12B தக்கலை கிராமம் ஆகும். சுசிலாபாய் சொத்தில் உள்ள டிரான்ஸ்பார்ம் எத்தனை ஆண்டுகளாக உள்ளது என்றால் அது டிரான்ஸ்பார்ம் இல்லை மின் மாற்றம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன மின் மாற்றத்தில் இருந்து தான் கேரளா மற்றும் மார்த்தாண்டம் பகுதிக்கு மின் இணைப்பு வழங்கப்படுகிறது என்றால் சரிதான். அது பழைமையானது என்றால் சரிதான். சுமார் 50 ஆண்டுகள் பழைமையானது ஆகும். மேற்சொன்ன மின் மாற்றிக்கு பாராமரிப்புக்கு என் வீட்டின் கிழக்கு பக்கத்தில் உள்ள வழிப்பாதை வழியாகதான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். மேற்சொன்ன சுசிலாபாய் அசல் வழக்கு எண்.38/2009 என்ற வழக்கை இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்று ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சுசிலாபாய் எந்த சர்வே எண்ணில் அந்த வழக்கில் எனக்கு எதிராக உரிமைக்கோரியுள்ளார் என்றால் நினைவில்லை. என் எதிர் வழக்குரையிலும், சத்திய பிரமான வாக்குமூலத்திலும் மேற்சொன்ன அசல் வழக்கு எண்.38/2009 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4. மேற்சொன்ன அசல் வழக்கு எண்.38/2009 -ல் வழக்கு பட்டிகை சொத்தில் சர்வே எண்.41/1B என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கில் புதிய புல எண்.41/1B வழக்கில் வழக்கு பட்டிகை சொத்தின் வழியாக மின் இணைப்பு வழங்ககூடாது என்று பரிகாரம் கேட்டு இருந்தார் என்றால் சரியல்ல. மேற்சொன்ன சுசிலாபாய் சொத்திற்கு யாரும் செல்லக்கூடாது என்று தடை உத்தரவு கேட்டு இருந்தார். மேற்சொன்ன வழக்கில் சுசிலாபாய்க் சதகமாக நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்சொன்ன வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பானையில் வழக்கு பட்டிகை சொத்தின் வழியாக மின்சாரம் ஏதும வழங்கக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டுள்ளது என்றாலும் அதற்கான ஆவணத்தை இந்த வழக்கில் வாதி தாக்கல்

செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்சொன்ன வழக்கான அசல் வழக்கு எண்.38/2009 வழக்கில் யார் யாரை கட்சியாக சேர்த்துள்ளார் என்றால் என்னையும், தமிழ்நாடு மின்வாரியத்தையும் கட்சியாக சேர்த்துள்ளார். மேற்சொன்ன அசல் வழக்கு எண்.38/2009 நீதிமன்ற ஆணையர் நியமணம் செய்யவேண்டி நானோ, வாதியோ எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. மேற்சொன்ன அசல் வழக்கு எண்.38/2009-ல் என் தரப்பில் ஒரு எதிர்க்கோரிக்கை மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன எதிர்கோரிக்கை மனுவில் என் சொத்தின் கிழக்கு பக்கம் ஞானதாஸ் சொத்தும், தெற்கு விஜயா சொத்தும், மேற்கு தக்கலை மேக்காமண்டம் ரோடு, வடக்கு இந்த வழக்கின் வாதி சொத்துள்ளது என்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் சொத்தின் கிழக்கு விஜயகுமார் சொத்து உள்ளது என்றாலும் நான் அசல் வழக்கு எண்.38/2009 -ல் தாக்கல் செய்யப்பட்ட எதிர்க்கோரிக்கை மனுவில் ஞானதாஸ் சொத்து என்று பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் சொத்தின் கிழக்கு பக்கம் பாதை தான் உள்ளது என்றால் சரிதான். ரோட்டை தாண்டி தான் ஞானதாஸ் சொத்துள்ளது. ஞானதாஸ் என்பவருக்கு கிழக்கு பக்கம் சொத்தே இல்லை என்றாலும் இவ்வழக்கின் வாதியான சுசிலாபாய்க்கும், விஜயகுமாருக்கு தான் சொத்துள்ளது என்றால் சரியல்ல, ஞானதாஸ் சொத்துள்ளது.

6. ஞானதாஸ்க்கு என் வீட்டின் கிழக்கு பக்கம் உள்ள ரோட்டிற்கு கிழக்கு பக்கம் ஞானதாஸ் சொத்துள்ளது என்று காண்பிக்க ஆவணம் ஏதும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. என் வீட்டிற்கு தொட்டு கிழக்கில் இருந்து தெற்கு பக்கமாக அங்கன்வாடிக்கு செல்லும் ரோடு உள்ளது என்றால் சரிதான். என் எதிர் கோரிக்கை மனுவில் தெற்கு பக்கம் விஜயா சொத்து என்று பொய்யாக குறிப்பிட்டு உத்தரவு வாங்கியுள்ளேன் என்றால் எல்கைக்காக குறிப்பிட்டுள்ளேன் ஆனால் கிடப்பின் அவ்வாறு இல்லை. எல்கைக்காக அங்கன்வாடி ரோட்டை சேர்த்து தான் என்னுடைய பட்டா பூமியாக காண்பித்துள்ளேன் என்றால் இல்லை. என்னுடைய வீட்டிற்கு மேற்கு பக்கம் தக்கலை மேக்காமண்டம் ரோடு இல்லை என்றாலும் புதிய புல எண்.41/2-ல் ரோட்டிற்காக விடப்பட்ட பகுதிதான் மேற்கு பக்க எல்கை என்றால் சரியல்ல. கிடப்பிற்கும் அரசு ஆவணத்திற்கும் எதிராக ஒரு போலியான எல்கைகளை காண்பித்து அசல் வழக்கு எண்.38/2009-ல் தாக்கல் செய்யப்பட்ட எதிர்க்கோரிக்கை மனுவில் உத்தரவு பெற்றேன் என்றால் சரியல்ல.

என் எதிர்க்கோரிக்கைபடி உள்ள எல்கைகள் அனைத்தும் தவறானவை என்றால் சரியல்ல.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).